


ஈரோடு, கோவை, திருப்பூர், நீலகிரி ஒருங்கிணைந்த மாவட்ட கழக முன்னாள் செயலாளர் பி.ஏ.சாமிநாதன் அவர்களின் துணைவியார் சம்பூர்ணம்சாமிநாதன் மறைவினையொட்டி கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா அன்னாரின் இல்லத்திற்கு நேரில் சென்று சம்பூரணம்சாமிநாதன் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் சி.ஆர்.ராமச்சந்திரன், அருண்குமார், தினேஷ்குமார், செந்தமிழ் செல்வன், புளியம்பட்டி சிதம்பரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

### புதுக்கோட்டை அருகே பேருந்திலிருந்து மாணவிகளை கீழே தள்ளிவிட்டது

# மனிதநேயம் அற்ற கொடூரச் செயல்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**சென்னை, செப். 4-**

**புதுக்கோட்டை அருகே பேருந்திலிருந்து பள்ளிச் செல்லும் மாணவிகளை கீழே தள்ளிவிட்டது மனிதநேயம் அற்ற கொடூரச் செயல். இதற்கு காரணமானவர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

புதுக்கோட்டை அருகே பள்ளி செல்லும் பழங்குடியின மாணவிகள், அரசு பேருந்திலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டு, படுகாயமடைந்த சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது. பேருந்தில் கூட்டம் அதிகமாக இருப்பதாகக் கூறி, நடத்துநரும் ஓட்டுநரும் மாணவிகளை பேருந்திலிருந்து இறக்கிவிட முயன்றதும், மறுத்த மாணவிகளை கீழே தள்ளிவிட்டதும் மனிதநேயம் அற்ற கொடூரச் செயல்.

கல்வி கற்கச் செல்லும் குழந்தைகள் மீதே தீண்டாமைக் கொடுமையை நிகழ்த்தும் அளவுக்கு, சாதி என்னும் மனநோயால் இச்சமூகம் இன்னும் பாதிக்கப்பட்டிருப்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய அவலம்.

சிகிச்சை பெற்று வரும் மாணவிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு வழங்குவதோடு, உரிய விசாரணை நடத்தி, இச்சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது எந்தவித சமரசமுமின்றி உடனடியாக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

### நூறு நாள் த.வெ.க. ஆட்சியில் போராடிய

# விவசாயிகளின் மீதான வழக்கையும் தள்ளுபடி செய்வீர்களா?

## சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேள்வி!

சென்னை, செப். 4-

சட்டப்பேரவையில் முதலமைச்சர் 110 விதியின் கீழ் அறிக்கை ஒன்றினை படித்தார். அதில் விவசாயிகள் மீதான வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படுவதாக அறிவித்தார். அதன் பிறகு நடைபெற்ற விவாதத்தில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியதாவது:



பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் விவசாயிகள் போராடியபோது பதியப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்து இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்த நூறு நாள் ஆட்சியில் விவசாயிகள் பல ஊர்களில் எல்லாம் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள் மீது வழக்கு பதிந்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் தள்ளுபடி செய்யப்படுமா என்று ஒரு கேள்வி எழுகிறது.

எங்கள் ஆட்சியில் செய்தார்கள் என்று சொல்கிறார்கள், உங்கள் ஆட்சியில் நூறு நாளில் விவசாயிகள் கடன் ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கையை முன் வைத்து போராடியவர்களை கைது செய்து மண்டபத்தில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அந்த வழக்கையும் தள்ளுபடி செய்வீர்களா? என கேட்க விரும்புகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பினார்.

### விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் பயனுள்ள வகையில்

# மணலூர்பேட்டையில் உழவர் சந்தை அமைத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் வசந்தம் கார்த்திகேயன் கோரிக்கை!

சென்னை, செப். 4-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் போது ரிஷிவந்தியம் தொகுதி உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பயனுள்ள வகையில் மணலூர்பேட்டையில் ஒரு உழவர் சந்தை அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து வசந்தம் கார்த்திகேயன் பேசியதாவது:

ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட மணலூர் பேட்டைப் பேரூராட்சி என்பது, 15,000 மக்கள் தொகையைக் கொண்ட பெரிய பேரூராட்சியாகும். அதைச் சுற்றியுள்ள 20 கிராமங்களில் 60,000 மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் அன்றாட நிகழ்வுகளுக்காக எதை வாங்க வேண்டுமென்றாலும், மருத்துவமனை செல்ல வேண்டுமென்றாலும் மணலூர்பேட்டைக்குதான் வரவேண்டியுள்ளது. அப்படிப்பட்ட மணலூர் பேட்டையில் ஒரு உழவர் சந்தை அமைத்துக்கொடுத்தால் அங்குள்ள விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் பெரும் பயனுள்ளதாக இருக்கும்.



எங்கள் மாவட்டத்தின் தலைநகரான கள்ளக்குறிச்சியில் இருக்கின்ற உழவர் சந்தை, சிறிய குறுகலான இடத்தில் இருக்கிறது. இதனால் தினமும் காலை 6 மணியிலிருந்து 9 மணி வரையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. எனவே, அந்த உழவர் சந்தையை விஸ்தரித்துத் தர வேண்டும்.

அதற்கு அங்கே போதிய நிலம் இல்லையென்றால் அரசுக்கு தானமாக நாங்கள் நிலத்தை கொடுப்பதற்கும் தயாராக இருக்கின்றோம். ஆகவே, அந்த இடத்தை விஸ்தரிப்பு செய்து தர வேண்டும். அதாவது, அந்த சந்தைக்கு இடமில்லாமல் கள்ளக்குறிச்சி நகராட்சியைப் பொறுத்தமட்டில் பொதுவாக அரசு நிலங்கள் இல்லை. நேற்றுகூட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லிதான் COLLECTOR'S CAMP OFFICE கட்டுவதற்கு ARRANGEMENT செய்தோம்.

நகராட்சியை ஒட்டி இடமில்லாத காரணத்தினால் அந்த உழவர் சந்தை அமைக்க நிலம் வேண்டுமென்றாலும் நாங்கள் இலவசமாக அரசுக்கு தரவும் தயாராக இருக்கின்றோம். அங்கு ஒரு புதிய உழவர் சந்தையை அமைத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். மக்களுக்கு பயனாக இருக்கும் என்று பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வசந்தம் கார்த்திகேயன் கோரிக்கை வைத்தார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு!


தேனி தெற்கு மாவட்டம், கம்பம் ஒன்றியத்தை சேர்ந்த, குரு. இளங்கோ தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 02.09.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (4.9.2026 வெள்ளிக்கிழமை) மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் காஞ்சிபுரம் மாவட்ட தலைமைக் கழக பிரதிநிதிகள் என்.மருதுகணேஷ், திருமதி. கே.ராணி ரவிச்சந்திரன், செங்கல்பட்டு, மாவட்ட தலைமை கழக பிரதிநிதிகள் சி.என். அண்ணாதுரை எம்.பி., கோவி.லெனின் ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு கூட்டம் நடைபெற உள்ளது.

| நாள் 4.9.2026 | சட்டமன்ற தொகுதிகள் | தலைமைக் கழக பிரதிநிதிகள் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| காலை 10.00 மணி | காஞ்சிபுரம் உத்திரமேரூர் | என்.மருதுகணேஷ் திருமதி.கே.ராணி ரவிச்சந்திரன் | பிரியா மகால் உத்திரமேரூர் |
| பிற்பகல் 2.00 மணி | மதுராந்தகம் செய்யூர் | சி.என்.அண்ணாதுரை எம்.பி. கோவி.லெனின் | முகுந்தன் மகால் கருங்குழி |

எனவே, இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், செயலாளர்கள், கழக நிர்வாகிகள், மாநில, மாவட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து

2.செப்.15, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த விழா மற்றும் முப்பெரும் விழா

3. கழக ஆக்கப் பணிகள்

**க.சுந்தர்**
செயலாளர் - காஞ்சிபுரம் தெற்கு
மாவட்ட தி.மு.க.

### மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விவகாரம்:

# அறங்காவலர்களின் உரிமையை நீதிமன்றம் பாதுகாத்துள்ளது !

## முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை,ஆக.4-

சென்னை: மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் குடமுழுக்கு விழா கல்வெட்டில் அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரின் பெயர்களும் இடம்பெற வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:

2021-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் 30-க்கும் மேற்பட்ட முறை ஆய்வுகள் மேற்கொண்டோம். மாவட்ட அமைச்சர்கள் மூர்த்தி, தியாகராஜன், மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஒருங்கிணைத்து தொடர்ந்து பணிகளை மேற்கொண்டோம்.

குறிப்பாக, 2018-ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்தால் சேதமடைந்த 79 கல் தூண்களைக் கொண்ட வீர வசந்தராயர் மண்டபத்தை பழமை மாறாமல் முழுமையாக சீரமைத்துக் கொடுத்தோம்.

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் குடமுழுக்கை 17.09.2026 அன்று நடத்துவதற்கான தேதியையும் அன்றைய ஆட்சியிலேயே நிர்ணயம் செய்திருந்தோம்.

குடமுழுக்கு அழைப்பிதழ் தொடர்பாக சட்டப்பேரவையில் இரண்டு முறை கேள்வி எழுப்பினோம். அழைப்பிதழில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் எழுத்துப் பிழைகள் இருப்பதையும், மறைந்த தம்பிரான் ஒருவரின் பெயர் இடம்பெற்றிருந்த நிலையில் மதுரை திருஞான சம்பந்தர் மடாதிபதியின் பெயர் இடம்பெறாததையும் சுட்டிக் காட்டினோம்.

மேலும், திருக்கோவில் நிர்வாகத்தில் அறங்காவலர் குழுவுக்குச் சட்டப்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்தும் தொடர்ந்து எடுத்துரைத்தோம். 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் சட்டத்தின்படி அறங்காவலர் குழு என்பது பெயரளவிலான அமைப்பு அல்ல; திருக்கோவில் நிர்வாகத்தில் அதற்கு உரிய சட்டப்பூர்வ அதிகாரமும் பொறுப்பும் உள்ளது என்பதை சட்டப்பேரவையிலும், பத்திரிகைகள் வாயிலாகவும் எடுத்துச் சொன்னோம்.

அறங்காவலர் குழுவின் பெயர்களை குடமுழுக்கு அழைப்பிதழில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்கு சட்டப்பேரவை வாயிலாக கொண்டு சென்றோம். ஆனால், மாவட்ட அமைச்சர் நிர்மல்குமார், அறங்காவலர்களின் பெயர்களை இடம்பெறச் செய்ய முடியாது என்றும், அதற்கு அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில், அறங்காவலர் குழு உறுப்பினர் சுப்புலட்சுமி நீதிமன்றத்தை அணுகினார். தற்போது நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு இந்த அரசுக்கு மிகப் பெரிய பாடமாக அமைந்துள்ளது.

மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விவகாரத்தில் அறநிலையத்துறை அரசியல் செய்திருப்பதாக நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

அறநிலையத்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அந்தக் கருத்தை நீக்குமாறு கோரியபோதும், நீதிபதி அதற்கு மறுப்பு தெரிவித்திருக்கிறார்.

மேலும், குடமுழுக்கு விழா தொடர்பான கல்வெட்டில் அறங்காவலர் குழுத் தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களின் பெயர்களும் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அழைப்பிதழ்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், இரண்டு விதமான அழைப்பிதழ்கள் அச்சிட வேண்டிய சூழல் ஏற்படும் என்பதால், குறைந்தபட்சம் கல்வெட்டிலாவது அறங்காவலர்களின் பெயர்கள் கண்டிப்பாக இடம் பெற வேண்டும் என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

திருக்கோயில்கள் சார்பில் கல்லூரிகள் தொடங்குவதற்கு நீதிமன்றம் முழுமையான அனுமதி வழங்கியது எங்கள் ஆட்சிக்குக் கிடைத்த முக்கியமான வெற்றியாகும்.

அதேபோன்று, தற்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அரசாணை மூலம் நியமித்த அறங்காவலர் குழுவின் சட்டப்பூர்வ உரிமைகளை நீதிமன்றம் பாதுகாத்திருப்பது மற்றொரு முக்கியமான வெற்றியாகும்.

கடந்த காலத்தில் நடைபெற்றது சட்டத்தின் ஆட்சி என்பதற்கு இந்த நீதிமன்றத் தீர்ப்பு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அறங்காவலர் குழுவின் உரிமையை நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ள இந்தத் தீர்ப்பில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.




கிருஷ்ணகிரியில் 17ஆம் ஆண்டு மிலாடி நபி விழாவை முன்னிட்டு நடைபெற்ற இலவச திருமண விழாவிற்கு விழா குழு தலைவரும், நகர பொறுப்பாளருமான அஸ்லாம் தலைமை வகித்தார். இதில் கிழக்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து, மணமக்களுக்கு கட்டில், பீரோ உள்ளிட்ட சீர்வரிசை மற்றும் வீட்டு உபயோக நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்திய போது எடுத்த படம். உடன் மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், நகர பொறுப்பாளர் வேல்மணி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் ராஜன்உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.